RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1828

OPEN ACCESS

# தமிழ் இலக்கியங்கள் கதாபாத்திரங்கள், ஆசிரியர்களின் ஆளுமைப் பண்பு

**இரா. இளவரசு [அ, *]**

[அ] தமிழ்த்துறை, அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி- 626123, தமிழ்நாடு, இந்தியா.

# Characters in Tamil literature and Personality Traits of Teachers

**R. Elavarasu [a, *]**

[a] Department of Tamil, Ayya Nadar Janaki Ammal College (Autonomous), Sivakasi-626123, Tamil Nadu, India.

* Corresponding Author: elavarasu72@gmail.com

Received: 01-08-2022
Revised: 30-10-2022
Accepted: 05-11-2022
Published: 08-12-2022

Check for updates

**ABSTRACT**

Many studies can be carried out based on various theories in the Tamil language which has undergone various changes from time to time. In that way, Tamil literature, especially story-based literary forms have created the story based on the personality of the character in the story. The best character in personality becomes the hero of the story. The villain of the story has good personality but at the same time villain will have some minor flaw. In that way, personality is very important for every character. A person who have good character gains fame among the people. This article is about the interpretation of the personality theory, the characters with good personality, personality traits of the teachers and so on. etc.

**Keywords:** Personality, Theories, Leadership Quality, Characters, Hero.

## முன்னுரை

தமிழ் மொழி மிகப் பழமையான மொழி. அன்றைய காலம் தொட்டு இன்றுவரை தமிழ்மொழி காலத்திற்கு ஏற்ப தன்னை மெருகேற்றிக் கொண்டே வருகின்றது. தமிழ்மொழி இலக்கியங்கள் காலந்தோறும் மாற்றமடைந்து பல புதிய வடிவங்களை உட்கிரகித்துப் பொலிகின்றது. அதற்கேற்ப ஆய்வுப் போக்குகளும் மாறி வருவதைக் காண முடிகின்றது. புதிய புதிய இலக்கிய வடிவங்களுக்கு ஏற்ப ஆய்வுப் போக்கிலும் புதுமைகள் பல புகுந்துள்ளன. உதாரணமாக புதுக்கவிதை, புதினங்கள், சிறுகதைகள் போன்றவற்றின் வளர்ச்சி காரணமாக பெண்ணியம், தலித்தியம், மார்க்சியம் போன்ற கோட்பாடுகள் தனித்து வளர்ச்சி பெறத் தொடங்கின. பிற்காலத்தில் தோற்றம் பெற்ற இத்தகைய இலக்கியக் கோட்பாடுகள் பழந்தமிழ் இலக்கியங்களிலும் ஒப்பிட்டுக் காணும் வகையில் தமிழ்மொழி நெகிழ்வுத் தன்மை கொண்டது ஆகும். அந்த வகையில் ஆளுமைக் கோட்பாடு குறித்து அன்றைய காலம் தொட்டு இன்றைய காலம் வரையிலான தமிழ் இலக்கியங்களில் இடம்பெறும் செய்திகளை விரித்துரைப்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆளுமையின் விளக்கம்

ஆளுமை என்ற சொல்லிற்கு, “ஒருவனது பண்புகளைக் குறிக்கும் வெளித்தோற்றம்” என விளக்கம் அளிக்கிறார் (Sukirtha Pasamth, 2015). ஆளுமை என்பதை ஆங்கிலத்தில் Personality என வழங்குவர். Personality குறித்து கூறும்பொழுது, “Personality is the dynamic organization within the individual of those psycho-physical systems that determine his unique adjustment to his environment” என்கிறார் (Ugin Prango, 2017). ஆளுமை என்ற சொல் தமிழில் சிறந்த பண்புகளைக் குறிக்கும் ஒற்றைச் சொல்லாகும். ஆளுமை என்ற சொல்

அன்பு, இரக்கம், திறமை, அடக்கம், இன்சொல் கூறல், வீரம், தலைமைப் பண்பு, மதிநுட்பம், காலம் அறிந்து செயலாற்றல் போன்ற நற்பண்புகளை உடையவரைக் குறிக்கும். ஆளுமை என்ற சொல்லிற்குப் பொருத்தமான விளக்கம் தண்டியலங்காரம் கூறும் காப்பியத் தலைவனின் பண்புகள் என்று கொள்ளலாம். காப்பியத் தலைவனின் பண்பாகச் சுட்டுவது யாதெனில் 'தன்னிகரில்லாத் தலைவனை உடைத்தாய்' (தண்டியலங்காரம், நூற்பா 9:5) எனச் சுட்டுகின்றது. ஆளுமை என்பதன் சரியான விளக்கம் தலைவன் தன்னிகர் இல்லாதவனாக இருத்தல் வேண்டும் என்பதாகும். இத்தகைய ஆளுமைப் பண்புடைய கதாபாத்திரங்கள் பல தமிழ் இலக்கிய உலகில் அன்று முதல் இன்று வரை மக்கள் மனதில் நிலைத்து வலம் வருகின்றனர். அத்தகைய கதாப்பாத்திரங்களை ஆளுமைகளைக் கோட்பாட்டு அடிப்படையில் விவரிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆளுமைக் கோட்பாடு

ஆளுமைப் பண்பின் இலக்கணமாகச் சுட்டப்படும் உணர்வுகளைப் பட்டியலிடலாம் அவை, 1. நட்பு, 2. இரக்கம், 3.வீரம், 4.மானம், 5.இன்சொல், 6.எளிமை, 7.கோபம், 8.கொடை, 9.தனித்திறமை, 10.காதல், 11.பெண்மை போற்றல், 12.மொழிப்பற்று, 13.மதிநுட்பம் போன்றவை ஆகும். இத்தகைய பண்புகள் உடைய தலைமைக் கதாபாத்திரம் ஆளுமையின் அடையாளமாக அன்றைய கால இலக்கியங்கள் முதல் இன்றைய கால இலக்கியங்கள் வரை பதிவு செய்யப்பட்டு வருகின்றன. ஆளுமைக் கோட்பாட்டின் அடிப்படையில் இத்தகைய ஆளுமைகள் குறித்து இலக்கியங்களில் இடம்பெறும் பதிவுகளைக் காணலாம்.

### நட்பு

ஒரு மனிதனின் மிகச் சிறந்த உயரிய ஆளுமையாகக் கருதப்படுவது நட்பு ஆகும். வள்ளுவர் கூற்றுப்படி,

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து

அகநக நட்பது நட்பு"

என்பதாகும் (Thiruvalluvar, 2015). உண்மையான நட்பிற்கு இலக்கணமாக இலக்கியங்கள் பல்வேறு ஆளுமைகளைப் பட்டியலிடுகின்றன. குறிப்பாக ஆண்களுக்கான நட்பு குறித்த பதிவுகளே மிகுதியாகக் காணப்படுகின்றன. பெண் நட்பின் ஆழம் சங்க இலக்கியத்தில் தோழி என்ற கதாபாத்திரத்தின் மூலம் விவரிக்கப்படுகின்றது. பொதுவாக இலக்கியங்களில் இடம்பெறும் எந்த ஒரு கதாபாத்திரமும் ஏதாவது ஒரு வகையில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த கதாபாத்திரமே ஆகும். எவ்விதத் தேவையும் இன்றி படைக்கப்பட்டன அல்ல. அதிலும் குறிப்பாக தேர்ந்த புலவன் சிறுசிறு கதாபாத்திரங்களுக்குள்ளும் ஆழமான விடயங்களைப் புதைந்து வைத்திருப்பான். அந்த வகையில் நட்பிற்கு இலக்கணமாக அமையும் கதாபாத்திரம் தோழியாவாள். சங்ககால இலக்கியங்களில் பெரும்பான்மை இடம்பெறும் கதாபாத்திரம் தோழியாவாள். தலைவியின் களவு வாழ்விலும் கற்பு வாழ்விலும் தோழிக்கு முக்கியப் பங்கு உண்டு. உடன்போக்கில் தலைவியை அவள் மனம் விரும்பிய தலைவனுடன் அனுப்பி வைக்கும் பொழுது தோழி, தலைவனிடம், 'இன்று இருக்கும் இவளது இளமை கழிந்து முதுமை எய்திய போதும் அவளைப் பிரியாது இணைந்து இருப்பாயாக' என்று வேண்டுவதிலிருந்து அவள் கொண்ட நட்பின் ஆழம் புலப்படுகின்றது. இதனை,

"அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும்

பொன்னேர் மேனி மணியிற் றாழ்ந்த

நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்

நீத்த லோம்புமதி பூக்கே ழூர!"

என்ற பாடல் புலப்படுத்துகின்றது (Avvai Thuraisamy pillai, 2010). அதேபோல் கற்பு வாழ்விலும் தலைவிக்கு உற்ற துணையாக தோழி இருப்பதை இலக்கியங்கள் வெளிக்காட்டுகின்றன. கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார், பாரி கபிலர், அதியமான் அவ்வை, கர்ணன் துரியோதனன் போன்ற பல்வேறு நட்பின் இலக்கணங்கள் குறித்து இலக்கியங்கள் வழி காணமுடிகிறது. இத்தகைய நட்பின் இலக்கணமாகத் திகழ்பவர்களை இன்று வரை மிகப் பெரும் ஆளுமைகளாகவே இலக்கியங்கள் பதிவு செய்து வருகின்றன.

## இரக்கம்

உயிர்கள் மீது இரக்கம் காட்டும் பண்பு ஆளுமையின் அடையாளமாகச் சுட்டப்படுகின்றது. இதில் உயிர்கள் எனச் சுட்டும் பொழுது அவை மக்களாகவோ மாக்களாகவோ அல்லது மரம், செடி, கொடிகளாகவோ கூட இருக்கலாம். 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று கூறினார் வள்ளலார். ஒரு செடி வாடுவதைக் கூட வள்ளலாரால் தாங்க இயலவில்லை. இறை மார்க்கத்தைப் பின்பற்றிய பலரும் தாங்கள் காணும் ஒவ்வொரு காட்சியிலும் இறைவனைக் கண்டனர். அங்ஙனம் கண்ட காரணத்தினால் உயிர்கள் மீது இயல்பாகவே இரக்க உணர்வு தோன்றியது. பொதுவாக சமண பௌத்தர் உயிர்கள் மீது மிகுந்த இரக்கம் உடையவர்கள் என அறியமுடிகிறது. சமணர்கள் எப்பொழுதும் நடந்து செல்லும் பொழுது கூட கையில் மயில்பீலி கொண்டு தரையில் அசைத்துக் கொண்டே செல்வர். காரணம் யாதெனில் அவர்கள் செல்லும் பாதையில் சிறு சிறு எறும்புகளோ பூச்சிகளோ இருக்கும் பட்சத்தில் அதனைக் கொன்று விடக்கூடாது என்ற எண்ணத்தில் மயில்பீலி கொண்டு வீசிச் செல்வர். இங்ஙனம் சிறுசிறு உயிர்கள் மீது கூட இரக்கம் கொண்டவர்களாகத் திகழ்ந்துள்ளனர். இரக்கம் என்ற ஆளுமையின் தலையாய தன்மையில் வைத்துச் சுட்டப்படுபவர் பாரி ஆவார். சு.வெங்கடேசன் அவர்கள் வேள்பாரி நாவல் எழுதிய பின்னர் பாரி என்ற கதாபாத்திரம் மிகப்பெரும் ஆளுமையாக மக்கள் மத்தியில் வலம் வருகின்றார். பாரியின் இரக்க உணர்விற்கு அடையாளமாகச் சுட்டப்படுவது முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி என்பதாகும்.

பாரி குறுநிலத் தலைவனாக பறம்பு மலையின் அரசாட்சியை மேற்கொண்டான். பாரி குறித்து,

"நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச்

சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய

பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரல். 90

பறம்பிற் கோமான் பாரியுங்"

என்ற அடிகள் சுட்டுகின்றன (Pushparaj, 2015). அதாவது பாரி தான் சென்று கொண்டிருந்த பாதையில் முல்லைக் கொடியானது படர்வதற்குப் பற்றுக்கோடு இன்றி தவித்த நிலையில் அதனைக் கண்ட பாரி, தான் ஏறி வந்த தேரில் முல்லைக்கொடியைப் படரவிட்டான். இதிலிருந்து பாரி தனது பறம்பு மலையின் செடி, கொடிகள் மீது கொண்ட இரக்க உணர்வை உணர முடிகின்றது. இந்நிகழ்வு ஆரம்ப காலத்தில் பாரியின் பெரும் ஆளுமையாகச் சுட்டப்பட்டது. பிற்காலத்தில் மறுவாசிப்பு என்ற பெயரில் பாரியின் ஆளுமை கேள்விக்கு உள்ளாக்கப்பட்டது. சு.வெங்கடேசன் அவர்களின் வேள்பாரி புதினத்தில் இந்நிகழ்விற்கான கதை ஒன்று சுட்டப்பட்டுள்ளது. அதில் இக்கதைக்குக் காரணமானவர்கள் பாணர்கள் என்றும் பாணர்கள் தான் பாரிக்கு இக்கதையை நாடு முழுவதும் பரப்பினர் என்றும் சுட்டுகின்றார். இக்கதை குறித்து வேள்பாரி புதினத்தில் வரும் நீலன் என்ற கதாபாத்திரம் சுட்டும்பொழுது,

"பாரியின் புகழை உச்சத்துக்குக் கொண்டு போனது முல்லைக் கொடிக்குத் தேர் தந்தான் என்ற கதை. இந்தக் கதையைக் கேட்கும் பொழுது ஒவ்வொருவரின் மனதுக்குள்ளும் பச்சிளம் கொடி துளிர் விடுகிறது. இது உண்மையோ பொய்யோ தெரியாது. ஆனால் இந்தக் கதை தம் குழந்தைக்கு, தம் சுற்றத்துக்கு, தம் சமூகத்துக்கு, தம் வேந்தனுக்கு மிக அவசியம் என மக்கள் நினைத்தனர்." (Venkatesan, 2019) என்ற கூற்றால் பாரி என்ற ஆளுமையின் இரக்க உணர்வை உணர முடிகின்றது.

## வீரம்

சங்க இலக்கியங்கள் காதலையும் வீரத்தையும் மையமிட்டு படைக்கப்பட்டவை. அந்த வகையில் வீரம் ஆளுமையின் முக்கியப் பண்பாக அமைந்துள்ளது. எந்த ஒரு இலக்கியத்திலும் வீரம் முக்கியப் பங்கு வகிக்கின்றது. குறிப்பாக, கதைகளில் கதைத்தலைவன், எதிர்நிலை கதாபாத்திரம் என்ற நிலை அமையுமிடத்து வீரம் முதலிடம் பெறுகின்றது. வீரம் என்று கூறும் பொழுது ஆண்களின் வீரம் மட்டுமல்லாது பெண்களின் வீரம் விதந்து பேசப்படும் நிலை உள்ளது. சங்க இலக்கியத்தில் இடம்பெறும் மூதின்முல்லைத் துறை முழுமையாக பெண்களின் வீரத்தை மையமிட்டு படைக்கப்பட்டதாகும். மன்னர்களும் தங்கள் போர்த்திறத்தின் வாயிலாக வீரத்தை நிலை நாட்டினர். போர்க்களத்தில் புண்பட்ட மறவன் தனது வீரமிகுதியால் தான் அடைந்த புண்ணைக் கண்டு தாங்காதவனாகத் தானே தன் புண்களைப் பிளந்து உயிர் மாய்த்த செய்தியை,

“நகையமர் ஆயம் நடுங்க நடுங்கான்

தொகையமர் ஓட்டிய துப்பின் - பகைவர்முன்

நுங்கிச் சினவுதல் நோனான் நுதிவேலான்

பொங்கிப் பரிந்திட்டான் புண்”

என்ற நூற்பா புலப்படுத்துகின்றது (Thirunavukarasu, 2013). இங்ஙனம் வீரர்கள் தாங்கள் கொண்ட வீரத்தில் உறுதிப்பாடு உடையவர்களாக இருந்த தன்மையினை அறியமுடிகின்றது.

## மானம்

தமிழ் இலக்கியங்களில் மானம் என்ற பண்பு தலைமை பண்பின் கூறாக அமைகின்றது. தலைமைக் கோட்பாட்டின் தலையாய தன்மையாக விளங்கும் மானம் குறித்த செய்திகள் பல இலக்கியங்களிலும் சுட்டப்படுகின்றன. திருக்குறளில் மானம் குறித்து,

“மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்

உயிர்நீப்பர் மானம் வரின்”

என்ற குறள் சுட்டுகின்றது (Thiruvalluvar, 2015). சங்க இலக்கியத்தில் வெண்ணிக்குயத்தியார் பாடிய பாடலில் சோழன் கரிகால் பெருவளத்தானை எதிர்த்து சேர, பாண்டிய மன்னர்களும், 11 குறுநில மன்னர்களும் போரிட்டனர். அதில் கரிகாலன் எய்த அம்பானது மன்னனின் மார்பைத் துளைத்து முதுகில் புண் ஏற்படுத்தியது. இதனால் அம்மன்னன் தனக்கு மானக் குறைவு ஏற்பட்டது எனக் கூறி வடக்கு இருந்து உயிர்துறந்தான் என்பதை,

“நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி,

வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!

களி இயல் யானைக் கரிகால் வளவ!

சென்று, அமர்க் கடந்த நின் ஆற்றல் தோன்ற

வென்றோய், நின்னினும் நல்லன் அன்றே

கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை,

மிகப் புகழ் உலகம் எய்திப்,

புறப்புண் நாணி, வடக் கிருந்தோனே!”

என்ற பாடல் தெளிவுறுத்துகின்றது (Saminathaiyar, 2014). இங்ஙனம் தனக்கு இழுக்கு நேரும் பொழுது உயிரையும் விடத் துணிந்த பேராண்மை படைத்தவர் வாழ்ந்ததனை இலக்கியங்கள் பதிவு செய்கின்றன. இப்பாடலில் கரிகாலனின் வீரம் சுட்டப்படவில்லை. மன்னனின் மானமே பெரிதாகப்

பேசப்படுகின்றது. ஆயினும் இந்நிகழ்வின் காரணமாக அப்போரில் கரிகாலன் இறுதியில் கூட தனது வெற்றி முரசை முழங்கவில்லை எனும் பொழுது மான உணர்வின் மேன்மையை அறிய முடிகின்றது.

## இன்சொல் கூறல்

இன்சொல் கூறல் ஆளுமைப் பண்பின் முக்கியக் கூறாகும். தலைமைப் பண்புடைய ஒரு கதாபாத்திரம் இனிய சொற்களைக் கூறக்கூடிய தன்மையில் படைக்கப்படுதல் இயல்பு. விருந்தோம்பலின் முக்கியக் கூறாகவும் இன்சொல் சுட்டப்படுகின்றது. இன்சொல்லின் இன்றியமையாமையை வள்ளுவர்,

"முகத்தான் அமர்ந்து இனிதுநோக்கி அகத்தானாம்

இன்சொ லினதே அறம்"

என்ற குறளில் சுட்டுகின்றார் (Thiruvalluvar, 2015). பிற உதவிகள் செய்ய இயலவில்லை ஆயினும் இனிய சொற்களைப் பேசும் பண்புடையவர்கள் ஆளுமைத் தன்மையில் சிறந்து விளங்குவர். அவ்விடத்திலும் எதிர்மறையான சொற்களைக் கூறாது நேர்மறையான சொற்களைப் பேசக்கூடியவர்கள் யாவராலும் விரும்பும் தன்மை உடையவர் ஆவர். சங்க இலக்கியத்தில் விரிச்சி என்ற துறைக்கு இன்சொல் கேட்டல் அல்லது நற்சொல் கேட்டல் என்பதே பொருளாகும். சங்க இலக்கியத்தில் தலைவனைப் பிரிந்து வருத்தத்தில் இருக்கும் தலைவிக்காக அந்த வீட்டில் உள்ள முதுபெண்டிர் விரிச்சி கேட்கின்றனர். போர் நிமித்தமாகத் தலைவியைத் தலைவன் பிரிந்து சென்றுள்ளான். அவன் நல்ல முறையில் திரும்பி வரவேண்டும் என விரிச்சி கேட்கின்றனர். மhலைப் பொழுதில் வீட்டின் வெளியே மன்றத்தில் நின்று எங்கிருந்தேனும் நற்சொல் வருகின்றதா எனக் கேட்கும் பொழுது அருகில் உள்ள வீட்டில் ஒரு பெண் தன் வீட்டில் உள்ள கன்றுகளைப் பார்த்து மாலைப் பொழுதாகி விட்டது. 'இன்னே வருகுவர் நும் தாயார்' என்கிறாள் இதனை நன் நிமித்தமாகக் கொண்டு விரிச்சி ஏற்றதை,

"சிறு தாம்பு தொடுத்த பசலைக் கன்றின்

உறு துயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்

நடுங்கு சுவல் அசைத்த கையள், கைய

கொடுங் கோற் கோவலர் பின் நின்று உய்த்தர,

இன்னே வருகுவர், தாயர் என்போள்

நன்னர் நல் மொழி கேட்டனம்"

என்ற பாடல் தெளிவுறுத்துகின்றது (Pushparaj, 2015). ஆக யாரோ ஒருவர் கூறும் நற் சொல்லும் கேட்பவருக்கு இன்பம் பயக்கும். அந்த வகையில் நல்லியக்கோடன் தன்னை நாடிவரும் பாணர்களுக்கு உபச்சாரங்கள் செய்ததுடன் இன்சொல் கூறி முகமலர்ந்து உபதேசித்ததை,

"செய்ந்நன்றி அறிதலும், சிற்றினம் இன்மையும்,

இன்முகம் உடைமையும், இனியன் ஆதலும்,

செறிந்து விளங்கு சிறப்பின் அறிந்தோர் ஏத்த"

என்ற அடிகள் சுட்டுகின்றன (Pushparaj, 2015).

## எளிமை

எளிமை என்ற குணம் ஆளுமைக் கோட்பாட்டில் தலைசிறந்த அடக்க உணர்வைப் புலப்படுத்துவதாகும். ஆளுமைப் பண்பினை உடைய ஒரு தலைமகன் காண்பவர் வியக்கும் வண்ணம் எளிய தோற்றம் உடையவராக இருத்தல் முக்கியமாகும். திருக்குறளில் அரசனின் ஆளுமைப் பண்புகளில் ஒன்றாக எளிமை சுட்டப்படுவதை,

“காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்

மீக்கூறும் மன்னன் நிலம்”

என்ற குறள் தெளிவுறுத்துகின்றது (Thiruvalluvar, 2015). சீவக சிந்தாமணி காப்பியத்தில் சீவகன் ஆளுமைப் பண்புகளின் மொத்த உருவமாகப் படைக்கப்பட்டிருப்பான். ஆயினும் எப்பொழுதும் மிக எளிமையாக மக்கள் மத்தியில் நண்பர்கள் புடை சூழ அமர்ந்து மகிழ்ந்த காட்சிகளை உணர முடிகின்றது. இதனை,

“வாண்மின்னு வண்கை வடிநூற்கடற் கேள்வி மைந்தர்

தாண்மின்னு வீங்கு கழலான்றனைச் சூழ மற்றப்

பூண்மின்னு மார்பன் பொலிந்தாங்கிருந் தான்வி சும்பிற்

கோண்மின்னு மீன்சூழ் குளிர்மாமதித்தோற்ற மொத்தே.”

என்ற பாடல் வழி அறியலாம் (Ragavaiyangar, 2016).

## கோபம்

முற்கால இலக்கியங்களில் சுட்டப்படும் வீரம் என்ற பண்பு பிற்கால இலக்கியங்களில் கோபம் என்றும் ரௌத்திரம் என்றும் சுட்டப்படுகின்றது. பாரதியார் தனது புதிய ஆத்திச்சூடியில் ‘ரௌத்திரம் பழகு’ என்கிறார். அதாவது எங்கேனும் தவறுகள் நேரும் பொழுது அதனைத் தட்டிக் கேட்டு கோபப்படும் பண்பு ஆளுமையின் இன்றியமையாத பண்பாகும். அந்த வகையில் புதுக்கவிதை ஆசிரியர்கள் பலரும் ஆளுமைப் பண்புடையவர்களாக அறியப்படுகின்றனர். அப்துல் ரகுமானின் பித்தன், மீராவின் ஊசிகள் போன்ற நூல்கள் முழுக்க முழுக்க சமூகத்தில் நடக்கும் அவலங்களைச் சுட்டிக்காட்டும் விதமாக அமைந்துள்ளன. கையூட்டு குறித்து மீரா,

“ஆரா வமுதன்

அமைச்சர் பதவியை

இழந்து வருந்தி

இருந்த ஓர் இரவில்

அருகில் தூங்கிய

ஆசை மனைவியை

சும்மா சும்மா

சுரண்ட லானார்

அம்மா கேட்டார்

ஆத்திரத்தில்

“ஏன்தான் உங்களுக்கு

இன்னும் அந்தப்

பொல்லாப் பழக்கம்

போக வில்லையோ?”

என்று எள்ளலோடு சாடுவதை உணர முடிகின்றது (Saminathaiyar, 2014). இங்ஙனம் பல்வேறு முரண்பட்ட இலக்கியங்களும் சமூகச் சாடலை முன்வைப்பதைக் காணலாம்.

## கொடைச்சிறப்பு

சங்ககால புற இலக்கியங்கள் அனைத்தும் வீரத்தையும் கொடை சிறப்பையும் மையமிட்டு படைக்கப்பட்டவை ஆகும். ஆளுமையின் அடையாளமாக கொடை கொடுத்தல் பண்பு அமைகின்றது. வடமொழிக் காவியமான மகாபாரதத்தில் இடம்பெறும் கர்ணன் கொடை என்ற தலைமைப் பண்பில் சிறந்து விளங்கியதை இலக்கியங்கள் வழி அறியலாம். அதற்கு ஒரு படி மேலே தமிழகத்தில் வாழ்ந்த சிற்றரசர்கள் பாணர் முதலிய கலைஞர்களுக்குப் பலவித கொடைகளை அளித்த செய்திகள் சங்க இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. சிறுபாணாற்றுப்படை கடையேழு வள்ளல்களின் கொடைச் சிறப்பினை விதந்து ஓதுகின்றது. பரணர் பேகன் குறித்துப் பாடும் பொழுது கொடை வழங்கும் பொழுது எதையும் சிந்திக்காது வரையாது வழங்குவான் எனச் சுட்டுவதை,

"அறுகுளத்து உகுத்தும் அகல்வயல் பொழிந்தும்

உறும் இடத்து உதவாது உவர்நிலம் ஊட்டியும்

வரையா மரபின் மாரிபோல

கடாஅ யானைக் கழல்கால் பேகன்

கொடைமடம் படுதல் அல்லது,

படைமடம் படான் படை மயக்குறினே"

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன (Saminathaiyar, 2014).

## தனித்திறமை

ஆளுமைப் பண்புடன் படைக்கப்படும் ஒரு கதாபாத்திரம் பிற கதாபாத்திரங்களைப் போல் சாதாரணமாக இல்லாது ஏதேனும் தனித்திறமை உடைய பாத்திரமாக அமைதல் இன்றியமையாதது. ஆகவேதான் புராண, இதிகாசங்களில் கடவுளர்களின் ஆளுமைத் திறனை உச்சத்தில் காட்ட வரங்கள் அளித்தல், சாப விமோசனம் அளித்தல் போன்ற தனித்திறன்கள் சுட்டப்படுகின்றன. சீவக சிந்தாமணி மணக் காப்பியம் என அழைக்கப்படுகிறது. அதில் சீவகன் 8 பெண்களை மணம் புரிந்தான். எட்டு பெண்களைத் திருமணம் முடிக்கும் பொழுதும் தனது தனித்திறமைகளை வெளிக்காட்டி மணம் புரிந்த தன்மை காணப்படுகின்றது. பெருங்கதை என்னும் நூலில் கதைத்தலைவன் உதயணன் யாழிசை மீட்டி மதம் பிடித்த யானையை அடக்கும் ஆற்றல் உடையவன் என்பதை,

"வெஞ்சின வேழ வெகுளி நீக்கும்

மந்திர நாமம் வந்துநீர் கன்மெனத்

தேவவிந் திரனிற் றிருந்தப் பெற்ற

ஆய்பெரு நல்லியா ழமைவர வெழீஇக்"

என்ற பாடல் வழி அறியலாம் (Ragavaiyangar, 2016).

## காதல்

காதல் என்ற உணர்வு மனிதர்களின் அடிப்படை உணர்வு ஆகும். எல்லா மனிதர்களுக்குள்ளும் காதல் என்ற உணர்வு இருத்தல் இயல்பு. அதிலும் குறிப்பாக ஆளுமைப் பண்பு உடைய கதாபாத்திரத்தின் காதல் உணர்வு வியந்து பேசப்படுதல் இயல்பு. சங்க அக இலக்கியங்கள் அனைத்தும் தலைவன் தலைவிக்கு இடையேயான களவு, கற்பு வாழ்வு குறித்த செய்திகளைப் புலப்படுத்துகின்றன. பாரதியார் குயில்பாட்டில்,

"காதல் காதல் காதல் காதல் போயின் காதல் போயின்

சாதல் சாதல் சாதல்" (Bharathiyar, 2009)

என்றும், சங்க கற்பு வாழ்வில்,

"இம்மை மாறி மறுமை ஆயினும்

நீயாகியர் என்கணவனை

யானாகியர் நின்நெஞ்சு நேர்பவளே"

என்றெல்லாம் காதலின் உச்சம் சுட்டப்படுகின்றது (Ragavaiyangar, 2016). பல்வேறு இலக்கியங்களும் காதலின் தொடக்கத்தைச் சுட்டிய விடத்து பாரதிதாசன் அவர்கள் தனது குடும்ப விளக்கு நூலில் முதுமைக் காதலைக் காட்சிப்படுத்துகின்றார். திருமணமாகி நீண்ட நாட்கள் ஆகிய வயது முதிர்ந்த பெரியவரிடம், அவர் தனது மனைவி மீது கொண்ட காதலின் ஆழம் யாது என வினவி அதற்கு விடையாக பாரதிதாசன் சுட்டுவது,

"புதுமலர் அல்ல காய்ந்த புற்கட்டே அவள் உடம்பு!

சதிராடும் நடையாள் அல்லள் தள்ளாடி விழும்மூ தாட்டி

மதியல்ல முகம்அ வட்கு வறள் நிலம்! குழிகள் கண்கள்!

எதுஎனக் கின்பம் நல்கும்? இருக்கின்றாள் என்ப தொன்றே."

என்ற பாடல் அடிகள் புலப்படுத்துகின்றன (Bharathidasan, 2005). முதுமைக் காலத்திலும் தனது மனைவி மீது கொண்ட காதலை மிக அழகாக இவ்வரிகள் படம்பிடித்து காட்டுகின்றன.

## பெண்மை போற்றல்

ஆளுமை கோட்பாட்டில் ஒரு ஆண்மகனின் இன்றியமையாத பண்பாகச் சுட்டப்படுவது பெண்மை போற்றலாகும். பெண்கள் மீது மதிப்பு உடைய ஆண் ஆளுமையின் உச்சத்தைத் தொட்டவன் ஆவான். பாரதியார்,

"பெண்மை வாழ்கென்று கூத்திடு வோமடா!

பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா!

தண்மை இன்பம்நற் புண்ணியஞ் சேர்ந்தன

தாயின் பெயரும் சதியென்ற நாமமும்"

என்று பெண்மையின் மேன்மையைப் பறைசாற்றுகின்றார் (Bharathiyar, 2014). மேலும்,

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்,

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்,

திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்

செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்"

என்று பாரதி பெண்மையைப் போற்றி ஆளுமையின் அரசனாகத் திகழ்வதை அறிய முடிகின்றது (Bharathiyar, 2014).

## மதிநுட்பம்

ஆளுமைத் தன்மையுடன் ஒரு கதாபாத்திரம் படைக்கப்படும் பொழுது பிற கதாபாத்திரங்களிடம் இல்லாத மதிநுட்பம் தலைமைப் பாத்திரத்திடம் உள்ளதாகப் படைப்பது இயல்பு. ஆளுமை என்றாலே சிறந்த மதிநுட்பம் இன்றியமையாதது. குணமாலையார் இலம்பகத்தில் குணமாலை, சுரமஞ்சரி இருவரும் சுண்ணப் பொடி செய்கின்றனர். அவர்களுக்குள் யாருடைய சுண்ணம் சிறந்தது என்ற சர்ச்சை எழும்பொழுது பலராலும் அதனைத் தீர்த்து வைக்க இயலவில்லை. இறுதியில் சீவகனிடம் இரு

சுண்ணங்களில் எது சிறந்தது எனக் கேட்கின்றனர். சீவகன் இரு சுண்ணத்தையும் இரு கைகளிலும் எடுத்துக் காற்றில் வீசி எறிந்து குணமாலை சுண்ணமே சிறந்தது என்கிறான். காரணம் வினவிய பொழுது, ‘சுரமஞ்சரின் சுண்ணம் காற்றில் தூவப்பட்டதும் அது நிலத்தில் விழுந்து வண்டுகளால் உண்ணப்பட்டது. ஆனால் குணமாலை சுண்ணமோ காற்றிலே வண்டுகளால் கவரப்பட்டது’ என்று சுண்ணத்தின் திறத்தை மதிநுட்பத்துடன் ஆராய்ந்து உரைத்ததை,

“வண்ண வார்சிலை வள்ளல்கொண் டாயிடை

விண்ணிற் றூவியிட் டான்வந்து வீழ்ந்தன

சுண்ண மங்கை சுரமைய மாலைய

வண்ண வண்டொடு தேன்கவர்ந் துண்டவே”

என்ற அடிகள் தெளிவுறுத்துகின்றன. இத்தகைய மதிநுட்பம் ஆளுமையின் தலைமைப் பண்பாக அமைவதை அறிய முடிகின்றது (Tamilamuthan, 2016).

## மொழிப்பற்று

விடுதலைப் போராட்ட காலத்திற்குப் பின்னர் மொழிப்பற்றும் ஆளுமையின் அடையாளமாகத் திகழ்கின்றது. பல மொழிகள் தமிழகத்தில் புகுந்த தன்மையால் தாய் மொழியாம் தமிழ் மொழியின் பற்று ஆளுமையின் இன்றியமையாத பண்பாகத் திகழ்கின்றது. அதிலும் குறிப்பாக, பாரதியைப் போல் பல மொழிகள் அறிந்த பொழுதும் தாய் மொழியாம் தமிழ் மொழி மீது பற்றுக்கொள்ளும் தன்மை இன்றியமையாததாகின்றது. பாரதிதாசனின் புரட்சிக்கவி காப்பியத்தில் இடம்பெறும் உதாரன் நன்கு தமிழ் கற்றவன். உதாரன் தமிழ் மொழி மீது கொண்ட பற்றினை,

“தமிழறிந்ததால் வேந்தன் எனை அழைத்தான்

தமிழ்க்கவி என்று எனை அவளும் காதலித்தாள்!

அமுது என்று சொல்லும் இந்தத் தமிழ் என் ஆவி

அழிவதற்குக் காரணமாய் இருந்தது என்று

சமுதாயம் நினைத்திடுமோ? ஐயகோ! என்

தாய்மொழிக்குப் பழிவந்தால் சகிப்பதுண்டோ?

உமை ஒன்று வேண்டுகின்றேன். மாசில்லாத

உயர் தமிழை உயிர் என்று போற்றுமின்கள்!”

என்ற அடிகள் வழி அறிய முடிகின்றது (Bharathidasan, 2007).

## முடிவுரை

ஆளுமை என்ற சொல் தனிமனிதனின் தனிப்பட்ட திறமைகளின் புலப்பாடு என்பதை பல சான்றுகள் வழி இக்கட்டுரை புலப்படுத்துகிறது. பெரும்பாலான கதைத்தலைவர்கள் இத்தகைய ஆளுமைப் பண்பின் வெளிப்பாடாகவே படைக்கப்பட்ட நிலைகளையும் அறியமுடிகிறது. ஆளுமைக் கோட்பாடு தவிர்த்து இலக்கியங்களின் கதைத் தலைவர்களையோ பிற கதாபாத்திரங்களையோ ஆய்விற்கு உட்படுத்த இயலாது. எனவே, ஆளுமைக் கோட்பாட்டின் அடிப்படையில் இலக்கியங்களை ஆய்விற்கு உட்படுத்தும் பொழுது பல தெளிவான புரிதல்களைப் பெற முடியும்.

## References


Avvai Thuraisamy pillai, (2010) Natrinai, Poompugar Pathippagam, Chennai, India.

Bharathidasan, (2005) Kudumbavilakku, Manivasagar Pathipagam, Chennai, India.

Bharathidasan, (2007) Puratchikavi, NCBH, Chennai, India.

Bharathiyar, (2009) Kuyil Pattu, Sarartha Pathipagam, Chennai, India.

Bharathiyar, (2014) Bharathiyar Kavithaigal, Thendral Nilayam, Chidambaram, India.

Pushparaj, Pon. (2015) Sirupanatrupadai, Saratha Pathipagam, Chennai, India.

Ragavaiyangar, R. (2016) Kurunthogai, Saratha Pathipagam, Chennai, India.

Saminathaiyar, U.V., (2014) Purananooru, U.V. Saminathaiyar Nool Nilayam, Chennai, India.

Sukirtha Pasamth, R.S. (2015) Aalumai Valarchi, saras Pathipagam, Thirunelveli, India.

Tamilamuthan, (2016) Seevagasinthamani, Meiyappan Pathipagam, Chennai, India.

Thirunavukarasu, S. (2013) Puraporul Venbamalai, Kathir Pathipagam, Thiruvaiyaru, India.

Thiruvalluvar, (2015) Thirukkural, Manivasagar Pathipagam, Chennai, India.

Ugin Prango, C. (2017) Valamana Valvirku (Towards Integrated Personality), St. Xaviers College, Palayankottai, India.

Venkatesan, S. (2019) Velpari, Vikatan Prasuram, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License